# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) __________________________
   (Name) ____________________________
2. (Signature) __________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ...............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.________________________________
(In words)

| J | 2 | 6 | 1 | 6 |
|---|---|---|---|---|

Time : **2 1/2** hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **24** Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** ① ② ● ④
   where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Black Ball point pen provided by C.B.S.E.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है :
   **उदाहरण** : ① ② ● ④
   जबकि (3) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल C.B.S.E. द्वारा प्रदान किये गये काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**



www.examrace.com

**TAMIL**

**தமிழ்**

**Paper-III**

**தாள் - III**

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory. **(75 x 2 = 150)**

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **எழுபத்தைந்து (75)** விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் **இரண்டு (2)** மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(75 x 2 = 150)**

**1.** ‘பைந்தழிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்’ எனப்படுபவர்

(1) அயன் (2) அரன்

(3) அரி (4) அருகன்

**2.** ‘சைவசித்தாந்தம்’ என்ற சொல்லாட்சியை முதன்முதல் கையாண்டவர்.

(1) திருமூலர் (2) திருஞானசம்பந்தர்

(3) திருநாவுக்கரசர் (4) திருமங்கையாழ்வார்

**3.** அயிராணி ஆடியது

(1) குரவை (2) துணங்கை

(3) குஞ்சிதம் (4) கடையம்

**4.** எவருக்கானது வேத்தியல் கூத்து ?

(1) அரசர் (2) வேதியர்

(3) வேளாளர் (4) பொதுமக்கள்

**5.** தூது இலக்கிய யாப்பு

(1) ஆசிரியப்பா (2) வெண்பா

(3) கலிவெண்பா (4) கலிப்பா



www.examrace.com

6. தமிழ் நாடக வளர்ச்சியின் தந்தை எனப் போற்றப்படுபவர்

(1) பம்மல் சம்பந்த முதலியார் (2) சங்கரதாஸ் சுவாமிகள்

(3) இராமசாமி ராஜு (4) மோசூர் கந்தசாமி முதலியார்

7. 'பொறாமையினைப் பாவி' என்னும் இலக்கியம்

(1) திருக்குறள் (2) நாலடியார்

(3) நன்னெறி (4) உலக நீதி

8. மகரூஉக் கைக்கிளை எனக் கருதத்தக்கது

(1) கோவை (2) உலா

(3) தூது (4) பள்ளு

9. குடங்கை குவித்துக் கொட்டி ஆடுதல்

(1) கொடுகொட்டி (2) ஆவலம்

(3) கொம்மை (4) குடந்தம்

10. "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன் பரிமா நிரையிற் பரந்தன்று வையை" என்பதில் மும்மை எனப்படுவது

(1) முந்நாடு (2) மூவேந்தர்

(3) முச்சங்கம் (4) முத்தமிழ்

11. "பரசமயக் கோளரி" எனத் திருவாவடுதுறை மடத்தால் பட்டம் வழங்கப்பெற்றவர்

(1) சோமசுந்தர நாயக்கர் (2) பா. வே. மாணிக்க நாயக்கர்

(3) செல்வக்கணபதி (4) கு. சுந்தரமூர்த்தி



www.examrace.com

**12.** யாப்பருங்கல விருத்தியுரை வழி அறியலாகும் மறைந்து போன தமிழ் நூல்

(1) அகத்தியர் பாட்டியல் (2) அணியியல்

(3) அவிநயனார் களவியல் (4) ஆனந்த ஓத்து

**13.** 'ய்' என்னும் வினையெச்ச விகுதி வருவதற்கு எடுத்துக்காட்டு

(1) காய் (2) பாய்

(3) போய் (4) ஓய்

**14.** 'வேடரும் மயங்கும் மலை' என்பதில் வரும் உம்மை

(1) சிறப்பு (2) முற்று

(3) எண் (4) எச்சம்

**15.** பண்புத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக்கு எடுத்துக்காட்டு

(1) தாழ்குழல் (2) தேன்மொழி

(3) பூங்குழல் (4) கருங்குழல்

**16.** பரிபாட்டு எப்பொருளில் வரும் என்கிறார் தொல்காப்பியர் ?

I. அறம் II. பொருள்

III. இன்பம் IV. வீடு

இவற்றுள்,

(1) I, II, III சரியல்ல (2) I, II, IV சரியல்ல

(3) II, III, IV சரியல்ல (4) I, II, III, IV சரியல்ல

**17.** அகத்தியரை மேற்கோள் காட்டியவர்கள்

I. இளம்பூரணர் II. தெய்வச்சிலையார்

III. நச்சினார்க்கினியர் IV. மயிலைநாதர்

இவற்றுள்,

(1) I, III, IV சரி (2) I, II, III சரி

(3) I, II, III, IV சரி (4) I, II, III, IV சரியல்ல



www.examrace.com

**18.** இணைக்குறள் ஆசிரியப்பாவில்

I. முதலடியும் ஈற்றடியும் அளவடிகள்

II. இடையடிகள் குறளடிகள் மற்றும் சிந்தடிகள்

III. அகவலோசையே உண்டு

IV. வெண்டளை விரவி வரும்

இவற்றுள்,

(1) I, II, III, IV சரியல்ல (2) I, II, III, IV சரி

(3) I, III, IV சரி (4) I, II, III, சரி

**19.** கலித்தொகை,

I. தாயையும் உடன்பிறந்தாரையும் அரக்கு மாளிகையிலிருந்து வீமன் காப்பாற்றிய செய்தி உடையது.

II. துரியோதனின் தொடையை வீமன் பிளந்த செய்தி உடையது.

III. இராவணன் கயிலையைப் பெயர்த்த செய்தி உடையது.

IV. மார்கழி நோன்பு குறித்த குறிப்பு உடையது.

இவற்றுள்,

(1) I, II, III, IV சரி (2) I, II, III சரி

(3) I, III, IV சரி (4) I, II, III, IV சரியல்ல

**20.** பரிபாடல் கூறுவன

I. தீயின் தெறல் நீ II. மணியினுள் ஒளி நீ

III. சொல்லினுள் வாய்மை நீ IV. அறத்தினுள் அன்பு நீ

இவற்றுள்,

(1) I, II, IV சரியல்ல (2) I, II, III சரியல்ல

(3) I, III, IV சரியல்ல (4) II, III, IV சரியல்ல

**21.** இணையசை என்பது

I. நேரசை II. நிரையசை

III. நேர்நேர் IV. நேர்நிரை

இவற்றுள்

(1) I, II, III, IV சரியல்ல (2) II, III, IV சரியல்ல

(3) I, III, IV சரியல்ல (4) I, II, IV சரியல்ல



www.examrace.com

**22.** எவரைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்கிறார் பாரதியார் ?

I. ஔவையார் II. கம்பர்

III. இளங்கோவடிகள் IV. திருவள்ளுவர்

இவற்றுள்,

(1) I, II, III, IV சரி (2) I, II, III சரி

(3) I, III, IV சரி (4) II, III, IV சரி

**23.** கவியோகி சுத்தானந்த பாரதி பெற்றவை

I. வ.வே.சு ஐயரின் நட்பு II. தாகூரின் வாழ்த்து

III. பாரதியாரின் உறவு IV. தமிழ்ப்பல்கலைக்கழக இராசராசன் விருது

இவற்றுள்,

(1) I, II, III, IV சரி (2) I, II, III சரி

(3) II, III, IV சரி (4) I, II, III, IV சரியல்ல

**24.** திருக்குறளின் பழைய உரையாசிரியர்கள்

I. தருமர் II. தாமத்தர்

III. நச்சர் IV. திருமலையர்

இவற்றுள்,

(1) I, II, IV சரி (2) I, II, III சரி

(3) I, II, III, IV சரி (4) I, II, III, IV சரியல்ல

**25.** மலைபடுகடாம் சுட்டும் இசைக்கருவிகள்

I. எல்லரி II. குறுந்தூம்பு

III. பாண்டில் IV. கரடிகை

இவற்றுள்,

(1) I, II, III சரி (2) I, II, III, IV சரி

(3) II, III, IV சரி (4) I, II, III, IV சரியல்ல



www.examrace.com

26. உறுதிக்கூற்று (உ) : கங்கைக்கு அடியில் நந்தர்கள் தங்கள் செல்வத்தைப் புதைத்தனர்.

காரணம் (கா) : படையெடுத்துவரும் அலெக்சாந்தருக்கு அவர்கள் அஞ்சினர்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

27. உறுதிக்கூற்று (உ) : பொருளணிகளுள் பரியாயம் என்பதும் ஒன்று.

காரணம் (கா) : கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்று உரைப்பர் புலவர்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

28. உறுதிக்கூற்று (உ) : சொல்லணிகளுள் மடக்கு என்பதும் ஒன்று.

காரணம் (கா) : எழுத்தின் கூட்டம் இடைபிறிது இன்றியும் பெயர்த்தும் வேறு பொருள் தருமாறு புலவர்கள் பாடல் புனைவதுண்டு.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரி; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

29. உறுதிக்கூற்று (உ) : அடிப்படவிருத்தல் என்பது உழிஞைத்துறைகளுள் ஒன்று.

காரணம் (கா) : பகைவர் நாட்டை அடிமைப்படுத்தப் பாசறையிலே நீண்ட காலம் அரசன் தங்கியிருப்பது பற்றிக் கூறுவது அது.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரி; (கா) சரி

30. உறுதிக்கூற்று (உ) : அடிநிரல்நிறை என்பது செய்யுள் தொடை வகைகளுள் ஒன்று.

காரணம் (கா) : அடிதோறும் ஈற்றுச் சீரிலே நிரல் நிறுத்திச் செய்யுள் யாப்பதும் உண்டு.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று



www.examrace.com

31. உறுதிக்கூற்று (உ) : பஞ்ச காவிய நிகண்டு என்று ஒரு நிகண்டு உள்ளது.

காரணம் (கா) : ஐஞ்சிறு காப்பியங்களில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுவது அது.

(1) (உ) சரியன்று; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

32. உறுதிக்கூற்று (உ) : பகுபத உறுப்புக்களுள் அடிப்பாடு என்பதும் அடங்கும்.

காரணம் (கா) : அதனோடுதான் விகுதி முதலியன சேர்க்கப்படுகின்றன.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

33. உறுதிக்கூற்று (உ) : ‘அந்தணர் என்போர் அறவோர்.’

காரணம் (கா) : ‘எவ்வுயிர்க்கும் அவர்கள் செந்தண்மை பூண்டொழுகுபவர்கள்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

34. உறுதிக்கூற்று (உ) : சைவம் கூறும் தீக்கை வகைகளுள் நிருவாண தீக்கையும் ஒன்று.

காரணம் (கா) : சீடனது பாசபந்தம் அனைத்தையும் நீக்கிச் சிவபெருமான் திருவடியை அடையும்படி குரு செய்வது அது.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரி; (கா) சரி

35. உறுதிக்கூற்று (உ) : இறைவனை ‘அந்தர்யாமி’ என்பர் வைணவர்.

காரணம் (கா) : சித்து, அசித்து இவற்றுள் இயங்கு சக்தியாக இருப்பவன் அவன்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரி; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று



www.examrace.com

36. உறுதிக்கூற்று (உ) : உரையாசிரியர்கள் ஆழ்வார்களை “எம்பெருமானுடைய மங்கல குணங்களில் ஆழங்காற்படுபவர்கள்” என்றனர்.

காரணம் (கா) : வேதத்தாலும் அளவிட்டறிய முடியாத எம்பெருமானின் எல்லாக் குணங்களையும் அவனருளால் அறிந்து அனுபவிக்கும் ஞானமே ஆழங்காற்படும் அறிவாகும்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

37. உறுதிக்கூற்று (உ) : அகத்தியன் புவனிக்கு இயம்பிய தண்டமிழ் என்கிறது வீரசோழியம்.

காரணம் (கா) : அகத்தியன் தண்ணெனத் தமிழை வீரசோழிய ஆசிரியருக்கு இயம்பினான்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

38. உறுதிக்கூற்று (உ) : உழத்திப்பாட்டு என்பது குறவஞ்சியின் ஒரு பகுதியாகும்.

காரணம் (கா) : கூத்து வடிவில் உழவர் குலப்பெண்டிர்தம் வாழ்க்கை முறையை அப்பகுதி விளக்குகிறது.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

39. உறுதிக்கூற்று (உ) : பண்டைய வள்ளல்களைத் தலை, இடை, கடை என மூவகைப்படுத்திக் கூறுவர்.

காரணம் (கா) : வழங்கும் கொடை அடிப்படையில் அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

40. உறுதிக்கூற்று (உ) : கண்நிறை நீர் கொண்டனள் தலைவி.

காரணம் (கா) : இம்மையில் பிரியலம் என்றான் தலைவன்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று



www.examrace.com

41. <u>நிரல்படுத்துக.</u>

நாற்குற்றங்கள்

(1) அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்

(2) அழுக்காறு, அவா, இன்னாச் சொல், வெகுளி

(3) அழுக்காறு, வெகுளி, அவா, இன்னாச் சொல்

(4) அழுக்காறு, வெகுளி, இன்னாச் சொல், அவா

42. <u>நிரல்படுத்துக.</u>

பணி ஒப்படைக்கப்பட்ட வேண்டியவனின் பண்புகள் :

(1) அன்பு, தேற்றம், அவாவின்மை, அறிவு

(2) அன்பு, தேற்றம், அறிவு, அவாவின்மை

(3) அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை

(4) அன்பு, அறிவு, அவாவின்மை, தேற்றம்

43. <u>நிரல்படுத்துக.</u>

பிறனில் விழைவானுக்கு உண்டாவன் :

(1) பகை, பழி, அச்சம், பாவம்

(2) பகை, பாவம், பழி, அச்சம்

(3) பகை, பாவம், அச்சம், பழி

(4) பகை, பழி, பாவம், அச்சம்

44. <u>நிரல்படுத்துக.</u>

இறைக்கு ஏதமாவன :

(1) உவகை, இவறல், மானம்

(2) இவறல், மானம், உவகை

(3) இவறல், உவகை, மானம்

(4) உவகை, மணை, இவறல்



www.examrace.com

**45.** <u>நிரல்படுத்துக.</u>

நாட்டிற்கு அணி :

(1) பிணியின்மை, இன்பம், விளைவு, செல்வம், ஏமம்

(2) பிணியின்மை, இன்பம், செல்வம், விளைவு, ஏமம்

(3) பிணியின்மை, செல்வம், இன்பம், விளைவு, ஏமம்

(4) பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்

**46.** <u>நிரல்படுத்துக.</u>

நட்பு கொள்ள ஆராய வேண்டியவை :

(1) குணன், குன்றா இனன், குற்றம், குடிமை

(2) குணன், குடிமை, குற்றம், குன்றா இனன்

(3) குணன், குடிமை, குன்றா இனன், குற்றம்

(4) குணன், குன்றா இனன், குடிமை, குற்றம்

**47.** <u>நிரல்படுத்துக.</u>

சமயத்தாரானும் உலகத்தாரானும் கடியப்பட்டமை :

(1) களவு, காமம், இணைவிழைச்சு, கொலை

(2) களவு, காமம், கொலை, இணைவிழைச்சு

(3) களவு, கொலை, காமம், இணைவிழைச்சு

(4) களவு, கொலை, இணைவிழைச்சு, காமம்

**48.** <u>நிரல்படுத்துக.</u>

திருக்குறள் அறத்துப்பாலின் பிரிவுகள் :

(1) பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்

(2) பாயிரவியல், இல்லறவியல், ஊழியல், துறவறவியல்

(3) பாயிரவியல், துறவறவியல், ஊழியல், இல்லறவியல்

(4) பாயிரவியல், துறவறவியல், இல்லறவியல், ஊழியல்



www.examrace.com

**49.** <u>நிரல்படுத்துக.</u>

அரசின் வல்லமைக்கு அடிப்படைகள் :

(1) இயற்றல், வகுத்தல், ஈட்டல், காத்தல்

(2) இயற்றல், வகுத்தல், காத்தல், ஈட்டல்

(3) இயற்றல், ஈட்டல், வகுத்தல், காத்தல்

(4) இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல்

**50.** <u>நிரல்படுத்துக.</u>

தருக்கியிருப்பார் இழப்பன :

(1) கழகம், கவறு, கை

(2) கழகம், கை, கவறு

(3) கவறு, கழகம், கை

(4) கவறு, கை, கழகம்

**51.** <u>நிரல்படுத்துக.</u>

திருநீக்கப்பட்டார் தொடர்பாவன :

(1) கள், கவறு, இருமனப் பெண்டிர்

(2) இருமனப் பெண்டிர், கள், கவறு

(3) இருமனப் பெண்டிர், கவறு, கள்

(4) கள், இருமனப் பெண்டிர், கவறு



www.examrace.com

52. நிரல்படுத்துக.

குடிப்பிறந்தார் விலக்காதவை :

(1) நாண், ஒழுக்கம், வாய்மை

(2) நாண், வாய்மை, ஒழுக்கம்

(3) ஒழுக்கம், நாண், வாய்மை

(4) ஒழுக்கம், வாய்மை, நாண்

53. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | லாசரஸ் | (I) | தமிழ்-போர்த்துக்கீசிய அகராதி |
| (B) | ஹென்றிபவர் | (II) | தமிழ்-ஆங்கில அகராதி |
| (C) | இராட்லர் | (III) | வேத அகராதி |
| (D) | புரோயன்சா | (IV) | பழமொழி அகராதி |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |

54. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | நன்னீதி | (I) | வேதகிரி முதலியார் |
| (B) | நீதிசாரம் | (II) | வேதநாயகம் பிள்ளை |
| (C) | நீதிசிந்தாமணி | (III) | ஏரம்பையர் |
| (D) | நீதிநூல் | (IV) | உலகநாத முதலியார் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |



www.examrace.com

**55.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | நாலடியார் | (I) | வெல்வது வேண்டின் வெகுளி விடல் |
| (B) | நான்மணிக்கடிகை | (II) | கல்வி கரையில, கற்பவர் நாள்சில |
| (C) | திருக்குறள் | (III) | அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றம் |
| (D) | திரிகடுகம் | (IV) | பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | I | IV |
| (2) | II | III | IV | I |
| (3) | II | I | III | IV |
| (4) | II | I | IV | III |

**56.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | மாணிக்கவாசகர் | (I) | தாச மார்க்கம் |
| (B) | சுந்தரர் | (II) | சத்புத்திரமார்க்கம் |
| (C) | ஞானசம்பந்தர் | (III) | ஞானமார்க்கம் |
| (D) | நாவுக்கரசர் | (IV) | சகமார்க்கம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | I | II | IV |
| (2) | III | I | IV | II |
| (3) | III | IV | I | II |
| (4) | III | IV | II | I |

**57.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | பாலரிலா மனை | (I) | நாசியிலா முகம் |
| (B) | குஞ்சரமிலாச் சேனை | (II) | குணமிலா விதை |
| (C) | கொழுநனிலா மடவார் | (III) | காவலிலாப் பயிர் |
| (D) | கோயிலிலா ஊர் | (IV) | மதியிலா வானம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | I | III | II |



www.examrace.com

**58.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | சிறகுகள் | (I) | அநுத்தமா |
| (B) | கேட்டவரம் | (II) | சிவகாமி |
| (C) | கூட்டுப் புழுக்கள் | (III) | வாஸந்தி |
| (D) | குறுக்குவெட்டு | (IV) | அனுராதா ரமணன் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | IV | II | I |
| (2) | III | I | IV | II |
| (3) | III | I | II | IV |
| (4) | III | IV | I | II |

**59.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | திருவருணை அந்தாதி | (I) | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் |
| (B) | திருவந்தாதி | (II) | எல்லப்ப நாவலர் |
| (C) | சடகோபரந்தாதி | (III) | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| (D) | தில்லை யமக அந்தாதி | (IV) | கம்பர் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | IV | III | I |
| (2) | II | IV | I | III |
| (3) | II | I | III | IV |
| (4) | II | I | IV | III |



www.examrace.com

**60.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | சுப்பிரதீபக் கவிராயர் | (I) | சேதுபதி விறலிவிடுதூது |
| (B) | கச்சியப்ப முனிவர் | (II) | மான்விடு தூது |
| (C) | சரவணப்பெருமாள் கவிராயர் | (III) | வண்டுவிடு தூது |
| (D) | குழந்தைக் கவிராயர் | (IV) | கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | I | III | II |

**61.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | அரும்பொருள் விளக்க நிகண்டு | (I) | சுவாமிநாதக் கவிராயர் |
| (B) | ஆசிரிய நிகண்டு | (II) | காங்கேயர் |
| (C) | உரிச்சொல் நிகண்டு | (III) | ஆண்டிப் புலவர் |
| (D) | பொதிகை நிகண்டு | (IV) | அருமருந்தைய தேசிகர் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | II | I | III |
| (2) | IV | III | II | I |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |



www.examrace.com

**62.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | ஆதவன் | (I) | கல்யாணசுந்தரம் |
| (B) | மயன் | (II) | இராமச்சந்திரம் |
| (C) | வண்ணநிலவன் | (III) | க.நா.சுப்பிரமணியம் |
| (D) | வண்ணதாசன் | (IV) | சுந்தரம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | I | II |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |

**63.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | முகம் போன்றது நிலா | (I) | விளக்கணி |
| (B) | நின்முகமும் நிலவும் நிசியில் களிக்கின்றன | (II) | திருட்டாந்தவணி |
| (C) | விண்ணிலே நிலா மண்ணிலே நின் முகம் | (III) | வியதிரேகவணி |
| (D) | நிலவினும் மிக்கது களங்கமில் வதனம் | (IV) | விபரீத உவமை |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | III | II |
| (2) | IV | III | II | I |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | I | II | III |

**64.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | முடுவல் | (I) | குஞ்சாத்து இளமைப் பெயர் |
| (B) | ஒருத்தல் | (II) | தவழ்பவற்றிளமைப் பெயர் |
| (C) | பார்ப்பு | (III) | ஆண்மைப் பெயர் |
| (D) | குழவி | (IV) | பெண்மைப் பெயர் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |



www.examrace.com

65. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | கிழக்கு | (I) | வருணன் |
| (B) | தெற்கு | (II) | குபேரன் |
| (C) | மேற்கு | (III) | இயமன் |
| (D) | வடக்கு | (IV) | இந்திரன் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |

66. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | களியினும் பித்தினும் கடிவரையின்று | (I) | கவர்படுபொருள் மொழி |
| (B) | காமமும் அச்சமும் கைம்மிகின் உரித்து | (II) | மொழிந்தது மொழிவு |
| (C) | விரைவினும் சிறப்பினும் வரைவின்று | (III) | பிரிபொருள் சொற்றொடர் |
| (D) | வழுப்படலில்வழி வரைவின்று | (IV) | மாறுபடு பொருள் மொழி |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | I | IV | II |
| (2) | III | IV | II | I |
| (3) | III | IV | I | II |
| (4) | III | I | II | IV |

67. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | தெற்கு | (I) | சார்வபௌமம் |
| (B) | வடக்கு | (II) | வாமனம் |
| (C) | கிழக்கு | (III) | அஞ்சனம் |
| (D) | மேற்கு | (IV) | ஐராவதம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | IV | III | I |
| (2) | II | III | IV | I |
| (3) | II | IV | I | III |
| (4) | II | I | IV | III |



www.examrace.com

**(68 – 75)** பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியில் கண்ட வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவு செய்க :

பண்டைத் தமிழகத்தில், சிறந்த வகையில் விரும்பிய அளவு அணிகலம் செய்வதற்கேற்ற பொன், வெள்ளி, முத்து, மணி முதலிய கருவிகளும் தேர்ந்த பொற்கொல்லரும், அணிபவரும் இருந்தனர். காவிரியாறு, பண்டை நாளிற் பொன் மணலைக் கொழித்ததனால் பொன்னியெனப் பெற்றது. மதுரையிலிருந்த வெள்ளியம்பலமும் தில்லையிலிருந்த பொன்னம்பலமும் பண்டைத் தமிழகத்தின் வெள்ளி, பொன்வளத்தைக் காட்டும்.

முதற்காலத்தில் ஏராளமாய்ப் பொன் கிடைத்ததனால் பொன்னாலேயே காசடிக்கப்பட்டது. அதனால், காவிற்கு மட்டுமன்றி, தாது (உலோக) வகைகட்கும் பொன் என்பது பொதுப்பெயராயிற்று. வெண்பொன் = வெள்ளி, செம்பொன் = செம்பு, கரும்பொன் = இரும்பு, பொன் = தாது (metal). இதனால், தமிழகத்தில் இரும்புக் காலத்திற்கு முன் பொற்காலம் ஒன்று இருந்ததோ என ஐயம் எழுகின்றது. கடைக் கழகக்காலப் புலவர் சிலர்க்கு அளிக்கப்பட்ட பொற் பரிசிலே, அக்காலத்துப் பொன் வளத்தைக் காட்டப் போதுமானது. காப்பியாற்றுக் காப்பியனார், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் மீது பதிற்றுப்பத்தின் 4 ஆம் பத்தைப் பாடி, நாற்பது நூறாயிரம் பொன்னும் அவன் ஆண்டதிற் பாகமும் பெற்றார். பொன் என்பது பொற்காசு, காக்கை பாடினியார் நச்செள்ளையார், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் மீது பதிற்றுப்பத்து 6 ஆம் பத்தைப் பாடி, அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பெற்றார். கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதன் மீது பதிற்றுப்பத்து 7 ஆம் பத்தைப்பாடி, நூறாயிரம் பொற்காசும் அவன் மலைமீதேறிக் கண்டு



www.examrace.com

கொடுத்த நாடும்பெற்றார். அரசர், பாணனுக்குப் பொற்றாரையும், அவன் மனைவியாகிய பாடினிக்கு அல்லது விறலிக்குப் பொன்னணி கலமும், பரிசிலாக அளித்துவந்தனர், விறலி விறல் (சத்துவம்) பட ஆடுபவள். விறல் உள்ளக் குறிப்பால் உடம்பில் தோன்றும் வேறுபாடு. அவை கண்ணீர் வார்தல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலியன. கடியலூர் உருத்திரங்கண்ணனார், கரிகாற் பெருவளவன் மீது பட்டினப்பாலையைப் பாடி, பதினாறு நூறாயிரம் பொன் பெற்றார். மாதவிபோல் ஆடல், பாடல் அரங்கேறிய நாடகக் கணிகையன் மாலை விலை ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னாக மதிக்கப்பட்டிருந்தது. பாண்டிய நாட்டைச் சேர்ந்த கீழைக்கடல் முத்து, தொன்று தொட்டு உலகப் புகழ் பெற்றது. 13 ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டைப் பார்க்கவந்த மார்க்கோபோலோ என்னும் வெனீசு நகர வணிகர், சுந்தரபாண்டியன் தன் கழுத்தில் விலை மதிக்கவொண்ணாத பன்மணி மாலையும், மார்பில் விலையேறப் பெற்ற இருமணியாரமும், தோளில் மூன்று பன்முதத்க் கடிகையும், காலிற் கழலும், கால் விரல்களில் மோதிரமும் அணிந்திருந்ததாகக் கூறியுள்ளார். அணிகலத்திற்குரிய பொன், இயற்கையாகத் தூயதும், புடமிடப்பட்டுத் தூயதாக்கப் பெற்றதும் என இருவகை. இவற்றுள் முன்னது ஓட்டற்ற பொன் எனப்படும். புடமிடப்பட்டது மாற்றுயர்ந்த பொன் எனப்படும். பத்தரை மாற்றுத் தங்கம் சிறந்த தெனக் கூறுவது உலக வழக்கு. தாயுமான அடிகள் இதைப் பத்துமாற்றுத் தங்கம் என்பர். பொன்னின் மாற்றுரைக்கும் கல் கட்டளைக்கல் என்றும் உரைக்கும் கம்பி உரையாணி என்றும் பெயர் பெற்றன.

மாதவி, விரலணி (கான் மோதிரம்), பரியகம் (காற்சவடி), நூபுரம் (சிலம்பு), பாடகம், சதங்கை, அரியகம் (பாதசாலம்), குறங்குசெறி



www.examrace.com

(கவான் செறி), விரிசிகை, கண்டிகை (மாணிக்கவளை), தோள்வளை, சூடகம், கைவளை (பொன்வளை), பரியகம் (பாசிக்தாமணி, கைச்சரி), வால் வளை, (சங்க வளை, வெள்ளி வளை), பவழ வளை, வாளைப் பகுவாய் மோதிரம், மணிமோதிரம், மரகதத் தாள் செறி (மரகக் கடை செறி), சங்கிலி (மறத் தொடரி), நுண்ஞாண், ஆரம், கயிற்கடை யொழுகிய கோவை (பின்றாலி), இந்திர நீலக்கடிப்பிணை (நீலக்குதம்பை), தெய்வவுத்தி (திருத்தேவி), வலம்புரி, தொய்யகம் (தலைப்பாளை, பூரப்பாளை), புல்லகம் (தென்பல்லியும் வடபல்லியும்) என இருபத்தேழு வகை அணிகள் அணிந்திருந்த-தாகச் சிலப்பதிகாரக் கடலாடு காதை கூறுகின்றது. இவற்றுள் வேறு சில அணிகல் அக்காலத்திருந்தன அவற்றுள் அடங்காத ஒன்று சூடை அல்லது சூடாமணி, பெண்டிர் அரைப் பட்டிகை மட்டும் மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், வரிசிகை என ஐவகைப்பட்டிருந்தது.

இக்காலத்து அரைப்பட்டிகை ஒட்டியான மாகும். இங்ஙனமே சில அணிகள் வடிவம் பெயரும் மாறியுள. இக்காலத்துப் பாண்டி நாட்டுப் பழ நாகரிக மகளிர் போல், அக்காலக்கில் எல்லைத் தமிழப் பெண்டிரும் காது வளர்த்திருந்தனர். காது வளர்க்கும்போது அணிவது குதம்பையும், வளர்த்தபின் அணிவது குழையும் கடிப்பிணைமாகும்.

அக்காலத்தில் ஆடவரும் அணிகலன் அணிவது பெருவழக்கு, வணிகர் காதிற் குண்டலமும் தோளில் (புயத்தில்) கடகமும், மார்பில் மணிக் கண்டிகையும் அணிந்திருந்தனர். பிறவகுப்பார் காதிற் கடுக்கனும் கையிற் காப்பும் அணிந்திருந்தனர், கடுக்கனைப் பின்பற்றியே பிற்காலக் கமலம் (கம்மல்) என்னும் மகளிர் காதணி எழுந்தது. மறவர் தோறிற் கடகமும் காலிற் கழலும் அணியந்திருந்தனர். கழல் பிற்காலத்தில் வெண்டையம் என்ப்பட்டது. கைமோதிரம் இருபாலார்க்கும் பொதுவாம்.



www.examrace.com

**68.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | தோள் | (I) | கண்டிகை |
| (B) | மார்பு | (II) | கடுக்கன் |
| (C) | காது | (III) | கழல் |
| (D) | கால் | (IV) | கடகம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | IV | I | III | II |
| (3) | IV | II | III | I |
| (4) | IV | II | I | III |

**69.** பதிற்றுப்பத்தில் கபிலர் பாடியது.

(1) ஐயந்தாம் பத்து
(2) ஆறாம் பத்து
(3) ஏழாம் பத்து
(4) எட்டாம் பத்து

**70.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | பாதசாலம் | (I) | தலைப்பாளை |
| (B) | காற்சவடி | (II) | திருத்தேவி |
| (C) | தெய்வவுத்தி | (III) | பரியசம் |
| (D) | தொய்யகம் | (IV) | அரியகம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | II | III | I |
| (2) | IV | III | II | I |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | I | III |



www.examrace.com

71. <u>நிரல்படுத்துக</u>.

(1) மேகலை, காஞ்சி, பருமம், விரிசிகை, கலாபம்

(2) மேகலை, காஞ்சி, கலாபம், விரிசிகை, பருமம்

(3) மேகலை, காஞ்சி, பருமம், கலாபம், விரிசிகை

(4) மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகை

72. <u>உறுதிக்கூற்று</u> (உ) : பொன்னி என்பது காவிரியாற்றுக்கு வேறு பெயர் ஆகும்.

<u>காரணம்</u> (கா) : பண்டு அது பொன் மணலைக் கொழிதத்து.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

73. சிலம்பு கூறாதது.

(1) சூடகம்
(2) சூடை
(3) கடிப்பிணை
(4) சதங்கை

74. <u>உறுதிக்கூற்று</u> (உ) : பண்டைய ஆடல் மகள் விறலி எனப்பட்டாள்.

<u>காரணம்</u> (கா) : மனக்குறிப்பால் மெய்யின்கண் தோன்றும் வேறுபாடு தெரியாதபடி ஆடவல்லவள் அவள்.

(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

75. <u>நிரல்படுத்துக</u>.

(1) பொன், முத்து, மணி, வெள்ளி

(2) பொன், முத்து, வெள்ளி, மணி

(3) பொன், வெள்ளி, முத்து, மணி

(4) பொன், வெள்ளி, மணி, முத்து



www.examrace.com

**Space For Rough Work**

ExamRace



www.examrace.com